திருவாசகம் - 46, 47

# திருப்படை எழுச்சி

# திருவெண்பா



கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# திருப்படை எழுச்சி

## பிரபஞ்சப் போர்

## தில்லையில் அருளியது

**ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்**

**மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்**

**ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்**

**வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே. 01**

"சிவனடியார்களே, எம் எல்லோரது மனத்தையும் அக்ஞானம் மூடியுள்ளது. அதனால் தான் நாம் எல்லோரும் துன்பப்படுகின்றோம். அக்ஞானம் என்பது பற்று. அப்பற்றால் ஆணவம் மேலோங்குகிறது. இதை அகற்ற ஞானவாக்கான இறைபக்தி உதவுகிறது. இறைவனின் திருநாமத்தை ஓதுவதாகிய பறை சாற்றுங்கள். இறைவனது நாமம் மெஞ்ஞானத்தை வளர்க்கும். அறியாமையைப் போக்கும். அதனால் உறுதி உண்டாகும். மனம் உறுதியடைந்தால் மெய்யறிவு உண்டாகும். அந்த மெய்யறிவு ஆணவமாகிய அறியாமையை அகற்றுகிறது. அறியாமை அகல நல்வழி பிறக்கும். அது உண்மையை விளக்குகிறது. அதன்பின் திருநீறு அணிந்தால் அது மன வைராக்கியத்தை உண்டு பண்ணும். அந்த வைராக்கியம் பற்றுக்களை அகற்றிவிடும். அக்ஞானத்தை அகற்றியவர் சிவனது திருவடியை அடைவர். இது தான் இறைவனை அடையும் வழி. மகாலிங்கம் முன்பு மிகவும் மோசமாக வாழ்ந்தவன். துன்பங்கள் அதிகரித்தால் அத்துன்பங்களை நீக்க ஒரே வழி, அத்துன்பத்தை இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ளலே. மகாலிங்கம் யாரோடு பகிர்வான். ஒருவன் பிச்சைக்காரனிடம் கடன் கேட்பது போன்றநிலை மகாலிங்கத்திற்கு. யாராவது அவனைக் கண்டதும் விலகிச் சென்று விடுவர். நின்று கதைக்கக்கூட மாட்டார்கள். அப்போ அவன் எப்படி அத்துயரத்தைப் பகிர்வது. அதனால் அவனை அழைத்துச் சிவனிடம் கவலைகளை முறையிடச் சொன்னேன். அவன் எனது பேச்சைக் கேட்டுச் சிவனிடம் முறையிட்டான். கவலைகள் தீர்ந்தது. இப்போ அவனது துயரைப் பகிரப் பலர் முன் வருகிறார்கள். ஒழுக்கமான வாழ்வு சிவநினைவை அதிகரிக்கச் செய்யும். துன்பங்களை அகற்றும். சுற்றத்தவர்க்கும் இவை யாவும் நடைபெற வேண்டுமானால் மனதில் உள்ள அக்ஞானத்தை அகற்ற வேண்டும். அதை அகற்றும் மருந்து நாம உச்சாடனம். சிவனது

நாமங்களை உச்சரிக்க உச்சரிக்க அஞ்ஞானம் அகலும். அந்த இடத்தைச் சிவனது அருள் நிரப்பும். சிவனருள் உள்ளவன் யமனுக்கும் அஞ்சான். அதனால் சிவனது நாமங்களை உச்சரியுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்**

**ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்**

**திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்**

**அண்டர்நா டாண்வோம் நாம் அல்லற்படை வாராமே. 02**

"சிவனடியார்களே, நீங்கள் முன்அணியில் மேல்நோக்கிச் செல்லுங்கள். பக்தர்களான நீங்கள் சரியாக அணிவகுத்து முன்னேறுங்கள். யோகிகளே, நீங்கள் மதிநுட்பத்துடன் மேல்நோக்கிச் செல்லுங்கள். எதற்கும் தளராத வஜ்ராயுதத்துக்கு ஒப்பான சித்தர்களே, நீங்கள் பின் அணிவகுத்து ஏகுங்கள். துன்பத்திற்கு இடங்கொடாத தெய்வீகமானது எமது நாடு. அதை நாம் சென்றடைவோம்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், சித்தர்கள் எனப் பலவகையானவர்கள் எம்முடன் வாழ்கின்றனர். அவர்களை நம் நாடான மோட்சத்துக்குச் செல்லுமாறு கூறுகிறார். மோட்சத்துக்குச் செல்லும் வழி எதுவென்று நான் அடிக்கடி உங்களுக்குக் கூறியுள்ளேன். பற்றில்லாமல் சிவனைத் தொழுங்கள். சிவன் நேரில் வந்து உங்களை அழைத்துச் செல்வார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

*திருச்சிற்றம்பலம்.*

உ

சிவமயம்

# திருவெண்பா

## அணைந்தோர் தன்மை

## திருப்பெருந்துறையில் அருளியது

**வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்**

**பொய்யும் பொடியாகா தென்செய்கேன் செய்ய**

**திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ**

**மருவா திருந்தேன் மனத்து. 01**

"சிவனடியார்களே, முத்தியடைந்தோரின் தன்மைபற்றி மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு கூறுகிறார். "மகிமையோடு கூடிய ஞான அக்கினி போன்றவன் சிவபெருமான். அவன் தனது சொரூபத்தோடு என்னைச் சேர்த்துவிட்டான். அதனால் நல்வினையும், தீவினையும் அவ்வக்கினியில் பொசுங்கி அழிந்து விட்டன. பஞ்ச பூதங்களால் உருவாகிய பொய்யான இவ்வுடல் வெந்து போய்விடும். திருநீறு போன்ற சிவசொரூபம் எஞ்சி நிற்கும். அது சிவானந்தம் என்னும் தேனாகும்" என்கிறார். இது தூய்மையான நிலை. மனதில் உள்ள அழுக்குகள், உடல் யாவும் அழிந்துபோக உயிர்மட்டும் எந்தவிதமான பற்றுக்களுமின்றிச் சிவனுடன் கலந்து விடுகிறது. பற்றுள்ள உயிர் பொருத்தமான உடலை அடையும். பற்றற்ற உயிர் பிறப்பை அறுத்துவிட்டுச் சிவனோடு சேர்ந்து விடும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ காடுகோ**

**பார்க்கோ பரம்பரனே என்செய்தேன் தீருப்பரிய**

**ஆனந்த மாம் அத்தன் பெருந்துறையான்**

**தானென்பர் ஆரொருவர் தாழ்ந்து. 02**

"சிவனடியார்களே, சிவானந்தத்தை அனுபவிக்க அனுபவிக்க அது தெவிட்டாததாக இருக்கிறது. அந்த பேரமுதமான உணவில் பங்கேற்க வேறு யாரும் வராவிட்டால் நான் தனியவனாக உண்டு மகிழ்ந்து ஆரவாரம் செய்வதா..? அலறுவதா..? ஆடுவதா…? பாடுவதா..? கண்டு களிப்பதா…? உண்டு களிப்பதா…? என்று புரியாமல்

தடுமாறுகிறேன்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் அங்கலாய்க்கிறார். அதனால் அவர் சைவ மக்களைத் தன்னோடு சேர்த்து வந்து அந்தப் பேரானந்தத்தை அனுபவிக்குமாறு கோருகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே**

**உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் வையத்**

**திருந்துறையுள் வேல்மடுத்தன் சிந்தனைக்கே கோத்தான்**

**பெருந்துறையில் மேய பிரான்.** **03**

“சிவனடியார்களே, உறையிலே செயலற்று இருக்கும் வேலினை எடுத்து மார்பிலே குத்தினால் மனிதன் இறந்து விடுவான். பிழைகள் பலவற்றைச் செய்தவனைக் கூரிய வேலால் குத்திக் கொல்வது சிலரது இயல்பு. ஆனால் நான் எந்தப் பிழையையும் செய்தறியேன். உலகத்தார்கள் போலச் சாதாரணமாகச் சிவனை வணங்குகின்றேன். எனினும் சிவனை அடையும் வழிவகைகளை நான் அறியவில்லை. அதனால் பரமானந்தப் பெருவாழ்வு எப்படியானதென்று நான் அறியவில்லை. அத்தகைய எனக்குச் சிவன் ஞானவேலை எடுத்து எனது நெஞ்சில் ஆழமாகக் குத்திவிட்டான். அதனால் மயக்கத்தைத்தரும் பற்றுக்கள் யாவும் அழிந்தன. அதனால் தெளிவு பெற்றேன். அதன் மூலம் நான் உய்வடையலாம் என்று உணர்ந்து கொண்டேன்” என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

“சிவனடியார்களே, இந்நிலை மாணிக்கவாசக சுவாமிகளுக்கு எவ்வாறு வந்ததென்று யோசித்துப் பாருங்கள். ஓயாத சிவநினைவு தான் அவரை இந்நிலைக்கு உட்படுத்தியது. பற்றுக்களின்றிச் சிவனை ஆராதித்தால் இந்நிலை வரும். அதைவிட வேறு எந்தநிலையாலும் இந்நிலை வரமாட்டாது. கல்வியறிவால் வருமென்றால் கற்றவர்கள் அனைவரும் அந்நிலையை அடைந்து விடுவர். வழிபாட்டாலும் வராது. உலகில் ஒழுங்காக வாழ்ந்தாலும் வராது. பரஞானம் வாய்த்த பின்பே அந்நிலை உண்டாகும். அதனால் சிவனை ஆராதியுங்கள். பற்றுக்களைத் தவிருங்கள். சிவனே தஞ்சமென அடையுங்கள். அதனால் மாணிக்கவாசக சுவாமிகளோடு சேர்ந்து கொள்வீர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்**

**பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் தென்னன்**

**பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்**

**வருந்துயரந் தீர்க்கும் மருந்து 04**

“சிவனடியார்களே, வினைப்பயன் இருக்கும் வரையும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். அதைத் தவிர்க்க முடியாது. சுவர்க்கத்திற்குச் சென்றாலும் அந்நிலை மாறாது. அதனால் சிவஞானம் வந்து சேர்ந்த பின்பே பேரின்பம் வந்து சேரும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற**

**மறையோனும் மாலும்மால் கொள்ளும் இறையோன்**

**பெருந்துறையில் மேய பெருமான் பிரியா**

**திருந்துறையும் என்னெஞ்சத் தின்று. 05**

“சிவனடியார்களே, செருக்கென்ற ஆணவத்திற்குட்பட்டவர்களுக்கு இந்த நிலை ஒருபோதும் புரியாது. தெளிந்த அறிவுடையவர்களுக்கு இந்நிலையானது சொல்லாமலே புரியக்கூடியது” என்கிறார் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

“சிவனடியார்களே, சிவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருக்கிறான் என்பதை உணராது தேவர்கள் உட்படப் பலர் அவனை எங்கெல்லாமோ தேடியலைகின்றனர். அதனால் அவனைக் காணாது துன்புறுகின்றனர். உங்களின் உள்ளத்தில் இருக்கும் அவனை உங்களின் உள்ளத்தால் தேடுங்கள். உள்ளம் பரிசுத்தமாக இருந்தால் அவன் வெளிப்பட்டுக் காட்சி கொடுப்பான். இந்நிலையை அடையப் பற்றுக்களை நீக்க வேண்டும். பற்றற்ற உள்ளம் தெளிந்த நீரோடைபோல இருக்கும். அதாவது எந்தவித சலனங்களுமின்றி இருக்கும். பற்றுக்களால் தான் மனம் மாசுபடுகிறது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்” என்றார் மாணிக்கவாசக சுவாமிகள் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்**

**மத்தமே யாக்கும் வந்தென்மனத்தை அத்தன்**

**பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்**

**மருந்திறவாப் பேரின்பம் வந்து.** **06**

“சிவனடியார்களே, சொர்க்கத்தில் சாதகன் கல்லுப்போலப் பேச்சற்று, ஆடல் அசைவுகள் அற்று சிலைபோல இருப்பான். ஏனெனில் அவனது மனம் முழுவதிலும் சிவன் முழுமையாக வீற்றிருப்பதால் அவன் சிவநினைவால் உன்மத்தம் என்ற பெரும் பித்திற்கு ஆட்பட்டிருப்பான். அதில் திளைத்திருப்பதால் அவனால் எதையும் செய்யவோ, தீர்மானிக்கவோ முடியாது” அது கருங்கல் போன்ற நிலையாகும்” என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

“சிவனடியார்களே, காந்தத்தின் அருகில் இரும்பை வைத்தால் அந்த இரும்பும் சில மணி நேரத்துக்குள் காந்தமாகி விடும். அதுபோலச் சந்தன மரத்திற்கு அருகே நிற்கும் மரங்களும் சந்தன வாசம் வீசும். இது இயல்பு. பேரொழிப் பிழம்பான சிவனின் அருகே இருப்பவர்களுக்கு அந்த ஞானஒளி படும். இதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்” என்கிறார் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி**

**ஆரா அமுதாய் அமைந்தன்றே சீரார்**

**திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய**

**ஒருத்தன் பெருக்கும் ஒளி** **07**

“சிவனடியார்களே, வாரா வழியென்பது மீண்டும் பிறப்பை எடுக்காத வழியாகும். அதை மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு சொல்கிறார்; “எனது உள்ளத்தில் ஒளிவிடும் சிவனின் பேரொளி எப்பொழுதும் அகலாது இருந்த கொண்டே இருக்கும். அது இரண்டற்ற தனிப்பொருள். பேரானந்த சொரூபம். சிவனின் அருளால் அதை அறிந்து கொண்டதால் இனி எனக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை, பேரின்பமயான முத்தியைப் பெற்ற நான் சிவனுடன் ஒன்றாகக் கலந்து விட்டேன்” என்கிறார். இந்நிலையில் உயிரும் சிவமும் ஒன்றாகிவிடும். அவை இரண்டாக இருந்து சிவனருளால் ஒன்றாகி விட்டன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்**

**யாவர்க்கும் கீழாம் அடியேனை யாவரும்**

**பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்**

**மற்றறியேன் செய்யும் வகை. 08**

"சிவனடியார்களே, சிவன் எங்குமுள்ளவன். பரிபூரணன். அப்படியான சிவன் அற்பனான என்னை உலகத்தவர்கள் அறியத் தன்மயமாகினான். இதற்கு எப்படி நன்றி செலுத்துவது எனக்குப் புரியவில்லை" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

**மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த**

**தேவரும் காணாச் சிவபெருமான் மாவேறி**

**வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க**

**மெய்யகத்தே இன்பம் மிகும். 09**

"சிவனடியார்களே, மும்மூர்த்திகளும், பதினொரு உருத்திரர்களும், பன்னிரண்டு ஆதித்தியர்களும், அட்டவசுக்களும், இரண்டு அசுவினி தேவர்களும் காணாத கட்புலனாகாத சிவபெருமான் எனக்காகக் கீழ்நிலைக்கு இறங்கி வந்தது அவன் என்மீது கொண்ட அருளினால் என்பது எனக்குப் புரிகிறது" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். இது மிகவும் அரிய செயலாகும். மெய்யன்பர்களுக்கு அவன் காட்சி தருவான் என்பது இதன் மூலம் விளங்குகிறது" என்றார் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்**

**திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாம் தருங்காண்**

**பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்**

**மருந்துருவாய் என்மனத்தே வந்து. 10**

"சிவனடியார்களே, சிவன் கல்பதரு. அவனிடத்தில் நாம் கேட்டுப் பெறலாம். நிலையற்ற உலகப் பொருட்களைக் கேட்டு, அவற்றைப் பெற்றுச் சலிப்படைந்த நான் இறுதியில் அவனையே பெறலாம் என நினைத்துக் கேட்டுப் பெற்றுக் கொண்டேன். அவன் பெருமகிழ்வுடன் என்னை ஏற்றுக் கொண்டான் என்கிறார் மாணிக்கவாசகர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்**

**துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் அன்பமைத்துச்**

**சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே**

**ஊராகக் கொண்டான் உவந்து. 11**

"சிவனடியார்களே, தொண்டர்களின் உள்ளம் தான் சிவனது கோவிலாகும். அதை உணர்ந்தால் பேரொளியும், பேரின்பமும் உள்ள சிவனைக் காணலாம்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

"சிவனடியார்களே, நல்லவர்கள், தீயவர்கள் என்று பாகுபாடின்றிச் சிவன் எல்லோரது உள்ளத்திலும் கோவில் கொண்டிருக்கிறான். இதைப் பலரும் உணர்வதில்லை. அதை முழுமையாக உணர்ந்து கொள்பவர்கள் படிப்படியாக இறைமயமாகின்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

*திருச்சிற்றம்பலம்.*